# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூச]    யாழ்ப்பாணம்:-    நந்தன வருஷ ஐப்பசி மீ உசுஉ செவ்வாய்க்கிழமை (11 Nov. 1952)    [இல - ரு அ]

### மாணவருக்கு மாபாதகஞ் செய்த ஆசிரியர்!

இயதலாவப் பகுதி கஹ கொல்ல என்னுமிடத்திலுள்ள அரசாங்க பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ P. M. பீற்றர் சிஞ்ஞோ என்பவர் 273 மாணவருக்குச் சீனிதப்ப உணவு கொடுத்ததாகப் பொய்க் கணக்கிட்டுப் பணம் பெற்றாரென வதுளைப் பிரிவு நீதிபதி முன்பு குற்றஞ் சாட்டப்பட்டார்.

விசாரணையின்பொழுதவ ரிக்குற்றத்தை ஏற்றுக்கொண்டபடியால் ரூபா 400 தண்டம் விதிக்கப்பட்டனர்.

### என்கொண்டு உன்னைப் பணிகேனே!

திருச்சிற்றம்பலம்.

அழகே னின்பா லன்பா மனமா பழல்சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தே னென்கொண் டுன்னைப் பணிகேனே.

திருச்சிற்றம்பலம்.

# மும்மொழிக் கல்வி முக்கியமானது

### ஸ்ரீ சுத்தானந்த யோகிகள் கூற்று

**கம்பளை**

கம்பளைப் பொதுக்கூட்டத்தில் சுவாமிகள்பேசும்பொழுது இலங்கையின் பொருளாதார விருத்திக்கு இந்தியத் தொழிலாளர் செய்து வரும் சேவை மிகப் பெரியது காடாய்க்கிடந்த மலைகளை இன்று பொன் கொழிக்கும் நாடாக்கியிருக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் இலங்கையையே தாயகமாக நினைத்துவாழுகின்றனர். இலங்கை அரசாங்கம் இவர்களுக்கு வாக்குரிமை மறுப்பது நேர்மையும் நீதியுமற்ற செயலாகும்! இவர்களை இலங்கைப் பிரசைகளாகப் பதிவு செய்யுமாறு நான் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேனென்றுகூறினர்

**கொழும்புபௌத்தஇளைஞர்சங்கம்**

கொழும்பு பௌத்த இளைஞர் சங்க மண்டபத்திலே பேசும் பொழுது இந்தியாவில் நிலவிய வேதாந்த சித்தாந்த ஒற்றுமை நீங்கியதே இந்தியா அடிமையாதற்குக் காரணமாயிற்று.

மனிதன் பரிசுத்தமடைதற்குச் சுயநலமற்ற வாழ்க்கை நடத்தவேண்டும். என்று கூறினர்.

**நாவலப்பிட்டி**

நாவலப்பிட்டியிற் பேசும் பொழுது சிங்களம் தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்றுக்கொள்வது நல்லது. விஞ்ஞான வளர்ச்சிக்கு ஆங்கிலம் அவசியம் தேவை, ஆகையால் அதை வெறுக்கக் கூடாது. நீங்கள் சிங்களவர் தமிழர் என்ற பேதமில்லாது அன்பாய் வாழ வேண்டும் என்று கூறினர்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

அரசியல் அலை

# கல்விப் பகுதியிற் காண்பது தடுமாற்றமே!

## சோதனை என்பது வீண் வினைக்கேடு!!

### அரசாங்க அலுவல்கள் என்றால் அரை குறையே!!

இலங்கைக் கல்விப் பகுதியைப் போலப் பலராலும் பலவாறாகவெடுத்துப் பேசப்படும் அரசாங்கத் துறை வேறொன்றில்லை என்பது நிலைபெற்றுவரும் பொதுசன அபிப்பிராயம். வழக்கிலமர்ந்த இந்தப் பெயரை நிலை நாட்டவேண்டு மென்பதுதான் கல்விப் பகுதியாரின் கருத்துப்போலும்.

எட்டாந்தரத் தெரிவுச் சோதனையில் எங்கேயோவோரிடத்தில் கேள்விப் பத்திரங்களையும் மாதிரி விடைப் பத்திரங்களையும் கொண்ட உறையைத் தலைமை ஆசிரியர் தவறாகக் குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னர் திறந்துவிட்டாராம். திறந்தவர் தெரியாமற் செய்த பிழையைஉடனே அறியவில்லையாம்.

சரி அவ்வாறானால் மாதிரிப் பத்திரங்களின் பிரதிகள் பத்திரிகைகளிலே காற்று வேகமாய் அச்சேற்றப்பட்ட தெவ்வாறோ? கைபிழைபாடு நீதி கேடான குற்றமாகிவிட்டதே.

கல்விப் பகுதியாருக்குத் தலைமை ஆசிரியரின் செய்கை பாரதூரமாகத் தெரியவில்லையே! சோதனையின் கண்ணியம் பாதிக்கப்படவில்லையாம!

எப்போதுதான் இலங்கையிற் சோதனைக் கேள்விகள் பலரறியா இரகசியமாகப் போகின்றனவோ?

### கேள்விகள் வெளியான பரீட்சை

எட்டாம் வகுப்புப் பரீட்சைக் கேள்விகள் வெளிவந்துவிட்டன! ஆயினும் பரீட்சை நடந்தேறியது.

### இலங்கை இந்திய பிரசா உரிமைச் சட்டம்

இலங்கை இந்திய பிரசா உரிமைச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் திருத்துகின்றது. இத் தொடர்பில் உள்ளதை உள்ளவாறு இந்திய அரசாங்கத்துக்கும இந்திய மக்களுக்கும் விளக்குதற்கென இலங்கை இந்திய மகாநாட்டார் தூதுக்குழு ஒன்று செல்கின்றது.

இவை இவ்வாறிருப்ப இந்திய அரசாங்கத்தார் இத்தொடர்பில தங்களுக்குண்டாயிருக்கும திருப்தியின்மையை இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்திருப்பதாக அறியவருகிறது.

### காந்திய திருமண உடன்பாடு

காந்தி ஆசிரியர் கந்தையா
காந்தி ஆசிரியை இராசநாயகி

மாதகலைச் சேர்ந்த காந்தி ஆசிரியர் திரு. பொ. கந்தையா (திருக்கோணமலை கோணேஸ்வர வித்தியாலய ஆசிரியர்) அவர்களுக்கும், திருகோணமலை அன்பர் திரு பொ. சிவசேகரத்தின் சகோதரி செல்வி பொ. இராசநாயகி (கிண்ணியா அரசினர் பாடசாலை ஆசிரியை) அவர்களுக்கும் காந்திய - சர்வோதய கொள்கைகளுக்கும் லட்சியங்களுக்கும அமைய சென்றமாதம் 15-ந் திகதி காந்தியத் திருமண உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிகிறோம்.

# தாய்மொழியிற் கல்வி அளித்தல் சாலப் பொருந்தும்

## இலகுவான வழி

### இயல்பான நெறி இதுவே!

"வருகிற தை மாதம் முதல் ஆறாம் வகுப்பில் நாட்டுமொழி மூலம் கல்வி கற்பிப்பது எம எதிர்கால நல்வாழ்வுக்குப் பாதகம் விளைவிக்கும். கல்வி இன்று அரசியல்வாதிகளின் விளையாட்டுப் பொருளாகிவிட்டது. உங்கள் சிறாரின் பிறப்புரிமையாகிய நல்ல அத்திவாரமுள்ள கல்வியைக் கொள்ளை யிடுகின்றது இன்று கட்சியரசியல் .... ....... 1955-ல் எட்டாம் வகுப்புக் கல்வி நாட்டுமொழியில் நடைபெறும். இதிலிருந்து அனுமானிக்கப்பட வேண்டியது இதற்கு நாலு ஆண்டுகளின் பின் சர்வகலாசாலையிற் புகுவோர் சிங்களம் தமிழிலேயே கல்வி பெறுவர் என்பதே. ஆனால், சர்வகலாசாலை இம்மொழியின் மூலம் போதனை செய்ய இயலுமா என்று இனனும ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்திலது. 15 அல்லது 20 ஆண்டுகளுள் விஞ்ஞான பாடங்களை ஆங்கிலத்தைத் தவிர்த்துக் கற்பிக்க முடியாது என்பதில ஐயமில்லை. இப்படியிருந்தும் கல்விப் பகுதியார் ஆறாம் வகுப்பில் நாட்டுமொழி மூலம கல்விகற்பிக்க முயல்வதால் அம்மாணவர் சர்வகலாசாலைக் கல்விக்குப் போதிய ஆயத்தமின்றிச் செல்கின்றனர். அவர்களது ஆங்கிலம் சர்வலாசாலைக் கல்விக்குப் போதியதாய் இருக்கமாட்டாது.'

—வண. சுவாமி பீற்றர்பிள்ளை

வண சுவாமி பீற்றர் பிள்ளை அவர்கள உயர்நிலைப்பள்ளி மாணவனின் கல்விக் குறிக்கோள சர்வகலாசாலையுட்புகுதலேஎன்றஅனுமானத்தினை மீத்த இவ்வாதம் அமைந்திருக்கிறது. இவ்வனுமானம் எவ்வளவு குறையுடையது எனச் சேர். றிச்சர்ட். லிவிங்ஸ்ரன போன்றோர் எடுத்துரைத்தனர். இங்கிலாந்துக் கல்வித்திட்டத்திலேயே இக்குறையுள்ளது என வருந்துகிறார் கேம்பிரிஜ் சர்வகலாசாலையின் உபவேந்தராகவும் இருந்த இவ்வறிஞர். (கொக்குவில் இந்துகல்லூரி அதிபர் திரு. பேரின்பநாயகமும சாதாரண

### "சேமன்"

மக்களாக வாழப்போகின்ற பெரும்பான்மையான மாணவருக்கேற்ற கல்வி பாடசாலைகளிற் போதிக்கப்பட வேண்டும் என்கிறார்.) சிரேஷ்ட பாடசாலைக்கல்வி முடிந்ததும் எத்தனை மாணவர்கள் சர்வகலாசாலையுட் புகுவர்? இரண்டு வீதம் என்பதே அதிகம். அவர்களுக்காக மிகுதி 98 வீத மாணவர் ஆங்கிலஞ் சுமக்கும் பொதிமாடுகளாதல் வேண்டுமா? அவர்கள் என்ன மாபெரும் பயனை அடைந்துவிடப் போகிறார்கள். மற்றப் பாடங்களைப் படித்துப் பயன் படுத்தாது விடுவதைப்போல இதையுங் கைநழுவ விடுவர்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

நீர்வேலி
சர்வோதயஆச்சிரமத்துக்கு

### யோகி ஸ்ரீ சுத்தானந்தர் வருகை

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள 26-11-52 மாலை 6 மணிக்கு நீர்வேலி (கரந்தன்) யில் உள்ள சர்வோதய ஆச்சிரமத்துக்கு வருகின்றார். அகில இலங்கைக் காந்திய சேவாசங்க ஆதரவில் மேற்படி ஆச்சிரமத்தில் அளிக்கப்படும வரவேற்பில் யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் ஒரு உபந்நியாசம் நிகழ்த்துவாரெனவும் இது யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிகழ்த்தவிருக்கும் நான்கு முக்கிய உபந்நியாசங்களில் ஒன்றெனவுமறியவருகிறது. -கடித.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ ஐப்பசி மீ
உசு உ செவ்வாய்க்கிழமை

## கடமை உணர்ச்சி அற்ற காலர்!

பள்ளிக்கூடங்களில் எட்டாம் வகுப்பில் ஒரு எல்லையிட்டு அதில் உள்ள மாணவர்கள் எதிர்காலத்தில் எவ்விதமான கல்வி கற்கக் கூடியவர்கள் என்பதை அறிவதற்கு இயல்பாகவே அவர்களுக்கு இயைந்த பாடங்கள் எவை என்று ஆராய்ந்து வெவ்வேறு இனங்களாக எடுத்து வரையறை செய்யும் நோக்கமாக ஒரு சோதனையை அரசாங்கத்தார் ஒழுங்கு செய்தபொழுதே இவ்வழி செவ்விதானதா என்ற ஐயம் உண்டாயது. ஆனல் அது அவ்வளவில் நின்றுவிடவில்லை. சென்றவாரம் நடைபெற்ற சோதனைக்குரிய வினக்களை ஒரு பாடசாலைத் தலைமை ஆசிரியர் குறிக்கப்பட்ட நேரத்துக்குமுன் அறிந்துவிட்டாரென்றும் நெறி தவறிய முறையில் அறிந்ததைப் பலருமறியப் பரப்பிவிட்டாரென்றும் செய்திகள் கூறின. இதற்கிடையில் கல்விப் பகுதியார் பரபரப்புக்கு இடமில்லையென்றும் அடாத காரியம் நிகழ்ந்தபோதிலும் சோதனை விடாது நடத்தப்படு மென்றும் மாணவர்களின் இயல்பான ஆற்றலை அறிவதற்குச் சாதனங்கள் பலவற்றுட் சோதனையு மொன்றென்ற முறையில் வினப் பத்திரங்கள் வெளிவந்தமை நிலைமையைமாற்றமுடியாதென்றும் பிழையைப் பிழையென்றேற்புக் கொள்ள மறுக்கின்றவர்களின் குதர்க்கவழிவிளக்கமொன்றை வெளியிட்டார்கள். அத்துடனமையாது வெளி வந்த வினப் பத்திரங்கள் எவ்வெவ்விடங்களில் மாணவர்கள் கைக்கெட்டியுள்ளன வென்பதையும் விசாரணை செய்யக் கல்விப்பகுதியார் ஒழுங்குபண்ணியிருக்கிறார்கள்.

வினப்பத்திரங்கள் வெளிவந்தமை இப்பொழுது தான் முதல் முறையல்ல. கல்விப் பகுதியாருக்குக் காலத்துக்குக் காலம கலக்கம் உண்டுபண்ணக் கேள்விப்பத்திரங்களை நுழைந்து எடுக்கும் நூதன பூதம் இலங்கையில் உலாவிக் கொண்டே வருகிறது. இன்னமும் ஒரு பூதம் 'கள்வனும் கூடவே நிற்கின்றான்' என்ற முறையில் உள்வீட்டில் உலாவிக்கொண்டிருக்கின்ற தென்ற எண்ணத்தை உண்டுபண்ணி விட்டார் எட்டாம் வகுப்பு வினப் பத்திரங்களை எடுத்துபயோகித்த தலைமை ஆசிரியர்.

ஆராய்வில்லாது பிழையாக வினப் பத்திரங்களை இந்தத் தலைமை ஆசிரியர் பார்க்க நேரிட்டாலவற்றை நெறி தவறி உபயோகித்திருக்கமாட்டார். அந்தக் கணத்திலேயே அந்தத் தவறை உரிய அதிகாரிகளுக் கறிவித்திருப்பார். அப்படியல்லாது வினப்பத்திரங்களையும் அவற்றோடு சேர்ந்த வேறு விபரங்களையும் பலரறிந்த இரகசியமாக்கி விட்டார் என்றால் இவர் தன்னைத் தான் உணராத ஒழுக்க நெறியற்ற ஒருவராக இருக்க வேண்டும் அன்றேல் இச் சோதனையை எவவாற்றாலும் இழுக்குடையதாகச் செய்யும் நோக்கமுள்ளவராயிருத்தல் வேண்டும். எவ்வழியிலும் ஆசிரிய அமைப்புக் கடங்காதவர் இவர்; கடமையின் கண்ணியத்தை அறியாதவர் இவர்; துன்மார்க்கத்திலே துணிந்து நிற்பதையே தொழிலாகக் கொண்டவர் இவர். மாணவர்களைப் பேணி வளர்க்கும் பெருங் கடனுக்கெட்டுணையும் பொருத்தமில்லாதவர் இவர். இன்ன பல துன்மதி படைத்தவரின் ஒழுங்கீனத்தை உள்ளபடி முற்றாக விசாரணை செய்த பின் இவரை வேலை நீக்கம் செய்வதோடமையாது நீதி மன்றத்தின் ஆராய்வுக்கும் விடவேண்டிய கடமை அரசாங்கத்துக்குரியது.

# யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் வருகையின் யாழ்ப்பாண நிகழ்ச்சித் திட்டம்

## 19--11--52 — 2-12--52 வரை

**19—11—52 புதன் :**

மாலை 4 மணி நாவலர் சந்தியிலிருந்து நகரமண்டபத்துக்கு ஊர்வலம். மாலை 5 மணிக்கு நகரசபை மண்டபத்தில் நகரசபை பகிரங்க வரவேற்புக்கள்,

6-45 சைவபரிபாலன சபையாரால் நாவலர் மண்டபத்தில வரவேற்பும், நாவலர் படத் திறப்புவிழாவும்,

**20—11—52 வியாழன் :**

காலை 8-30 மணி யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி.

காலை 9.15 மணி யாழ்ப்பாணம இந்துக் கல்லூரி வரவேற்பு.

மாலை 4 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி.
மாலை 5 மானிப்பாயில்வரவேற்பு.
6.30 வட்டுக்கோட்டை கலட்டி வரவேற்பு.

**21—11—52 வெள்ளி :**

காலை 8.30 மணி யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரவித்தியாலயம்,
9.20 வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி.
மாலை 4 சாவகச்சேரி வரவேற்பு
5.30 சரசாலை செல்லுதல்.
7மணி யாழ்ப்பாணம் வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலிற் கூட்டுப் பிரார்த்தனை.

**22—11—52 சனி :**

காலை 8 மணி இந்துவாலிபர் சங்கம். (திருநெல்வேலி)
9 மணி வைத்தீஸ்வரவித்தியாலயத்தில வட இலங்கை ஆசிரிய சங்க வரவேற்பு.
மாலை 4 மணி குரும்பசிட்டி சன்மார்க்க சபை வரவேற்பு.
மாலை 5 30 ஏழாலை மடம் செல்லுதல்.
6.45 தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வரவேற்பு.

**23—11—52 ஞாயிறு :**

காலை 8 மணி திருநெல்வேலி சைவாசிரியகல்லூரி வரவேற்பு.
9 மணி (திருநெல்வேலி) பரமேஸ்வரக் கல்லூரி.
மாலை 3.30 பலாலி அரசாங்க ஆசிரிய கல்லூரி.
4.30 மணி மாதகலில்வரவேற்பு.
6 மணி பண்ணாகம் வரவேற்பு.

**24—11—52 திங்கள் :**

மௌனம்.

**25—11—52 செவ்வாய் :**

காலை 8.30 மணி வதிரி.
9 15 மணி பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரி.
நண்பகல்செல்வச்சந்நிதி ஓய்வு.
மாலை 4 மணி பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி.
4 45 பருத்தித்துறைவரவேற்பு.
6.15 வல்லுவெட்டித்துறையில வரவேற்பு.

**26—11—52 புதன் :**

காலை 8 30 மணி சுன்னாகம் ஈழகேசரி நிலயம் செல்லுதல்.
9 மணி மல்லாகம் சைவ ஆங்கில வித்தியாசாலை.
9 45 மருதனாமடம் இராமநாதன் கல்லூரி.
மாலை 4 மணி இடைக்காடு
5 மணியளவில் உரும்பராய்.
6 நீர்வேலி வரவேற்பு.

**27—11—52 வியாழன் :**

காலை 7 மணியளவில் கீரிமலை மாவிட்டபுரம் செல்லுதல்.
8 மணி காங்கேசன்துறை அரசாங்க வைத்தியசாலை செல்லுதல்
8.30 காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரி.
9.15 காங்கேசன்துறை காசநோய் வைத்தியசாலை கூட்டுப் பிரார்த்தனை.
மாலை 4 மணி ஊர்காவற்றுறை St. Anthony's College.
4-30 ஊர்காவற்றுறை கரம்பன் வரவேற்பு.
6 30 காரைநகர் நடராசா மண்டபத்தில் வரவேற்பு

**28—11—52 வெள்ளி :**

காலை 9 மணி ஸ்கந்தவரோதயக்கல்லூரி. (சுன்னாகம்)

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## வட இலங்கை மது விலக்கு மகாசபை

### பகிரங்கக் கூட்டம்

நிகழும் ஐப்பசி 28-ந் திகதி, (13—11—52) மாலை 6மணிக்குச் சாவகச்சேரி இந்துக்கல்லூரிமண்டபத்தில் திரு. S. K. செல்லையா (இந்துக்கல்லூரி உப அதிபர்) அவர்கள் தலைமையில், சாவகச்சேரியிலுள்ள சாராயக் கடையை மூடுமாறு வாக்கெடுப்பு நடத்தும் பொருட்டு ஓர் ஆலோசனைக் கூட்டம் நடக்குமென்றும் அத்தருணம் Dr C. குருசாமி மகாசபைத் தலைவர் திரு. K. நவரத்தினம் மகாசபைக் காரியதரிசி திரு N. அருணாசலம் B A; நகரசங்கத் தலைவர் வித்துவான் திரு M. S. சபாரத்தினம் திரு. V S கார்த்திகேசு திரு ச. தியாகராசா முதலியோர் பேசுவார்களென்றும அறிய வருகின்றது.

# சைவத் தாபனங்களுக்கு வேண்டுகோள்

எமது நாடும் சமயமும் பாஷையும் அந்நியர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டிருந்த காலத்தில் எம் மதத்தவர் பலர் பல காரணம் பற்றியும் பிற மதங்களைத் தழுவி வந்ததாக அறிந்துள்ளோம். அக் காலத்தில் எமது சமய உண்மைகளை அறியவும், பரப்பவும்,

... அளவைச் சைவாபிமானி ....

போதிக்கவும் போதிய சைவப் பாடசாலைகளோ, சமயாசிரியர்களோ, சைவ ஸ்தாபனங்களோ, சுதந்திரமோ இக்காலத்திருப்பது போலிருக்கவில்லை. எமது நாடு சுதந்திரம பெற்ற இக் காலத்திலும் எம்மதத்தவர் பிரதானமாக கிறிஸ்தவ பாடசாலைகளில் ஆசிரியர்களாகச் சேரவும், கிறிஸ்தவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் ஆசிரிய மாணவர்களாகச் சேரவும், கிறிஸ்தவ ஸ்தாபனங்களால் நடாத்தப்படும் வைத்தியசாலைகளில் நோயாளரைப் பராமரிப்பவர்களாக (nurses and attendants) சேரவும், அநாதை விடுதிச்சாலைகளில் இலவசமாகச் சேரவும், கிறிஸ்த சமயத்தையும் இன்னும் மலைநாடுகளில் பௌத்தர்களாகச் சேர்ந்தால இலகுவில் இந்நாட்டுப் பிரசைகளாகப் பதியப்பட்டு விடலாமென்ற கருத்துப்பற்றிபோலும் புத்த மதத்தையும், முஸ்லீம்கள் கூடுதலாகவுள்ள இடங்களில் இஸ்லாம் மதத்தையும் தழுவுகின்றனர்.

சைவப் பாடசாலைகளில்லாக் குறையால எம்மதத்துப்பிள்ளைகள்பலர் புறச் சமயப் பாடசாலைகளில் கல்வி கற்க அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இவர்களைக் கற்பிப்பதற்குச்சைவசமய ஆசிரியர் மதம் மாற்றப்படுகின்றார்கள்! இன்றேல் அவர்கள் நியமனம் பெறுவது முடியாத காரியமாகின்றது. இன்னும் எந்தச் சமயப் பிள்ளையானாலும் எந்தச் சமய பாடசாலையில் படித்தாலும் அந்தப் பிள்ளையின சமயத்தையே அந்தப் பிள்ளைக்குப் போதிக்கவேண்டுமென்று அரசினர் பிரமாணம் இருக்கத் தக்கதாக பல வலையலான வழிகளைக் கையாண்டு நல்லொழுக்கப்பாடம, அந்தப் பாடம், இந்தப்பாடம் என்று நேர்மையற்ற முறையில் சைவப் பிள்ளைகளுக்குப் பிற மதங்கள் போதிக்கப்படுகின்றன. பாடசாலை நாட்களில் மாத்திரம அல்ல! ஞாயிறுக்கிழமைகளிற் கூடச் சைவப்பிள்ளைகளுக்குப் புறச்சமய நூல்கள் போதிக்கப்படுகின்றதாக அறிகிறோம்.

இப்படியான கருமங்கள் இந் நாட்களில் நடைபெறுவது ஒரு பகற் கொள்ளை மாதிரியான அடாத காரியம். சனசமூகத்திற்கு மிகவும் அடாத செயல்கள். சைவப் பிள்ளைகளின் சராசரிக்கு சைவ ஆசிரியர் ஒருவர் கிறிஸ்தவராக்கப்பட்டு சைவப் பிள்ளைகளைப் படிப்பிப்பதும், அரசினர் சட்டத்துக்கு மாறாகப் பாடசாலை

தொடர்ச்சி 3-ம பக்கம்

### நோயாளர்களுக்குச்
# சைவ நூல் அன்பு அளிப்பு

## நன்றி உரை

இந்துசாதனத்தில் வெளியிடப்பட்ட வேண்டுகோளுக்கு இயைந்து பின்னாற் குறிக்கப்படும் அன்பர்கள், நிலையங்கள் காங்கேசன்துறைக் கயரோக வைத்திய சாலையிலும் தேக சுல நிலையத்திலும் உள்ள நோயாளர்களுக்கு சைவ நூல் களைப் பரிந்து அனுப்பியுள்ளார்களென்றும, அன்னாருக்கு யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபையும் அன்பளிப்பை அகமகிழ்ந்து ஏற்றுக்கொண்ட நோயாள நண்பர்களும் உணர்ச்சிமிக்க நன்றியைத் தெரிவிக்கின்றார்கள்.

இந்த நற்பணியைச் சைவ அன்பர்கள் தொடர்ந்து செய்வார்களாக.

1 யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார்
2 ஸ்ரீ சண்முகநாதன் புத்தக நிலயம்
3 ஸ்ரீ இலங்கா புத்தக நிலயம்
4 ஸ்ரீ சுப்பிரமணிய புத்தக நிலயம்
5 வித்துவான் க. இராமலிங்கம் வண்ணார்பண்ணை
6 திரு. ச. ஜெயவீரசிங்கம் ஆசிரியர் வண்ணார்பண்ணை
7 திரு. வே. மாணிக்கவாசகர் வழக்கறிஞர் கொக்குவில்
8 [illegible]தர் வண்ணார்பண்ணை
9 திரு. சுப்பிரமணியம் [illegible]ாகப் பதிவாளா கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவத் தாபனங்களுக்கு வேண்டுகோள்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் சைவப்பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ சமயம் போதிக்கப்படுவதும் எவ்வளவு அடாத செயல் என்பது தெள்ளிதின் எவர்க்கும் புலனாகும்.

இப்படியான செயல்களை நீக்குதற்குச் சைவப் பெரியார்களும் சைவஸ்தாபனங்களும் முன்வரவேண்டும். எமது பாராளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவு காலங்களில் வாக்குச் சம்மதம் பெற வேண்டுமே என்ற நோக்கத்தினால் எவ்வளவு தூரம் இதில் சிரத்தை எடுப்பார்களோ தெரியாது. ஆகையால் சமயஸ்தாபனங்களும் சைவப் பெரியோரும் சைவப்பிள்ளைகள் கற்பதற்கு இன்னும் போதிய சைவப் பாடசாலைகளைத் தேவையான இடங்களில் தாபிக்க முன்வரவேண்டும். இன்னும் சைவப்பிள்ளைகளுக்கு பிறசமய நூல்கள் போதிக்கப்படுவதையும் கனம். கல்வி மந்திரி அவர்கள் கவனத்துக்குக்கொண்டுவந்து சைவாசிரியர்கள் சைவப் பிள்ளைகளுக்கு சமய பாடம் போதிப்பதற்கு நேர சூசிகையில கட்டாயம் இடம்பெற முகாமைக்காரர் வேண்டிய ஒழுங்கு செய்ய வேண்டுமென்றும் போதிய முயற்சி செய்யவேண்டும். கனம். கல்வி மந்திரியாரும் பாடசாலைகளில் சமயபாடம் கற்பிக்கப்படுதற்குரிய ஒழுங்குகள் நடைபெறுகின்றன என சமீபத்தில் ஒரு கூட்டத்தில் கூறியது மிக்கு கவனிக்கத் தக்கது.

சைவத்தாபனங்களும்சைவப் பத்திரிகைகளும் இவ்விஷயத்தில் போதிய முயற்சி எடுத்து ஆவன செய்யுமென சைவ உலகம் எதிர்பார்க்கின்றது

## கமத் தொழிலாளர் சங்கம்

சென்ற 4 வருடங்களுக்கு மேல் கமத்தொழிலாளர் அனுபவித்துவரும் வசதியீனங்களை அரசாங்கத்தாருக்கு எடுத்து மனுச் செய்து உதவியைப் பெறும் பொருட்டுக் காரைநகர்ச் சைவமகா சபைமண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை, (2-11-52) பிற்பகல் 4 மணியளவில் கமத்தொழிலாளர் சங்கக் கூட்டம் ஒன்று கூடப்பெற்றது. காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஆ. தியாகராசா அவர்கள் தலைமை வகித்தார்கள். ஆரம்பத்தில காரியதரிசி பேசுகையில்வருடந்தோறும்கமக்காரர்கள் பரப்பொன்றிற்கு ரூபா 100 வரை செலவழிக்கின்றார்களெனவும் அதனால் அவர்களுக்கு வருடந்தோறும் கடன்திகரிக்கிறதெனறும் கடந்த 4 வருடங்களுக்குமேல் நடந்த கஷ்டங்களைத் தொடர்ந்து கூறி இவ்வருடமும் பயிர் செய்ய இயலாதவர்களாய் இருக்கின்றார்களெனவும் அதனால் உணவு உற்பத்தி குறைய ஏதுவாயிருக்குமெனவுங் கூறி இவற்றிற்கு அரசாங்கத்தாருடைய உதவி வேண்டப்படுகிறதென்னும் பிரேரணையைப் பிரேரித்தார். பின் தலைவரவர்களும் கிராம முன்னேற்றச் சங்கத்தலைவரும் பிரேரணையை ஆமோதித்துப் பேசினர். ஈற்றில் இதுவிடயமாக அரசாங்கத்துக்கு மனுச்செய்ய ஒருஉபசபை அமைக்கப்பட்டது.

## யோகி ஸ்ரீசுத்தானந்த பாரதியார் வருகையின் யாழ்ப்பாண நிகழ்ச்சித் திட்டம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 4 மணி சண்டிருப்பாய் சைவ ஆங்கில வித்தியாசாலை.
4.45 சண்டிருப்பாய் தமிழ்வித்தியாசாலை பேருரை.
6.30 அளவெட்டி சைவமகாஜன சபை வரவேற்பு.

**29—11—52 சனி:**

காலை 9 மணி புங்குடுதீவு செல்லுதல்.
9 30 புங்குடுதீவு வரவேற்பு.
மாலை 4.30 உடுவில்வரவேற்பு
6 யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாசாலை பக்திப்பாடல்கள்

**30—11—52 ஞாயிறு:**

காலை 9 மணி அனலைதீவு.
மாலை 6 நயினாதீவு நாகபூஷணி அம்மன்கோயில் கூட்டுப்பிரார்த்தனை.

**1—12—52 திங்கள்:**

மாலை 3 மணி ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கம் வண். வைத்தீஸ்வர வித்தியாலயம்.

**2—12—52 செவ்வாய்:**

மாலை 6 30 மணி புகையிரத மார்க்கமாகக் கொழும்புக்குச் செல்லுதல்,

## மும் மொழிக் கல்வி முக்கியமானது!

முதலாம் பக்கத் தொடர்ச்சி

### குளியாப்பிட்டி

குளியாப்பிட்டியிற் சுவாமிகள் பேசும்பொழுது ஒவ்வொருவரும் தத்தம மதநூல்களிற் கூறியவாறு ஒழுகவேண்டும். புத்தபிரான் போதித்த தரும நெறியிலே பௌத்தர்கள் ஒழுகுவார்களானால் ஆசையொழியும். அல்லல் கருப சண்டைகள்எழமாட்டா என்று கூறினர்.

### கதிர்காமம்

கதிர்காமத்திலே பேசும்பொழுது அவ்விடம் அசுத்தமாயிருக்கிறதென்றும் அத்தகைய நிலைமையை நீக்க வேண்டுமென்றும் இந்துக்கள் பௌத்தர்களுடன் ஒற்றுமையாய் வாழவேண்டுமெனறுங் கூறினர்.

தலைவர்:
Dr. C. குருசாமி.
வரவேற்புக் காரியதரிசிகள்:
S. அம்பிகைபாகன்
C. விசாகப்பெருமாள்.
வைத்தீஸ்வரவித்தியாலயம்,
யாழ்ப்பாணம், 5-11-52.

# நேயர்கள் நெஞ்சம்

## ஆசிரிய அன்ப!

### சிதம்பரத் தர்மாதனங்கள்

=O=

இத்தருமாதனங்களைக் குறித்து ஒரு அவசரக்கூட்டம் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருடைய நாவலர் மண்டபத்திற் கூடவேண்டுமென்று கொழும்புத்துறை திரு. பொ. காசம் அவர்கள் எழுதிய கடிதத்தைக் கண்டேன். தருமம் செய்தவர்களுடைய நோக்கத்தை நிறைவேற்றும்படியான சட்டத்தை ஆக்குவதே உத்தமம். அதற்கு மாறாக இன்னொரு தருமத்துக்கோ அல்லது பொதுத்தருமத்துக்கோ உபயோகிக்கக் கையாளும் முயற்சி நீதிக்கு மாறானது. சிதம்பர நடராசப் பெருமானமீது கொண்டுள்ள பக்தியினாலேயே நம் முன்னோர்கள் இத் தருமங்களை உபகரித்துள்ளார்கள் என்பதை நாம் மறக்கவொண்ணாது. ஆதலால் பழைய நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய எவ்வகை முயற்சியையும் நாங்கள் கையாளுவோமாக. வேறு எவ்வித முயற்சியும் சித்திபெய்தாது. அப்படியானால் அக் காணிகளை அவற்றைக் கொடுத்தவர்களுடைய சந்ததிக்கே சேரவேண்டி வரும்.

ஆ. நில்லையர்பலம்
நீராவியடி
யாழ்ப்பாணம்.
9—11—52.

### சிதம்பர ஆதனங்கள்

—C—

சிதம்பரம் அம்பலவாண சுவாமி ஆலயத்துக்கு இலங்கையிலுள்ள ஆதனங்களை அரசாங்கத்தார் அரசாங்கப் பொருளாக்கப்போகிறார்களென திரு. பொ. காசம் அவர்கள் சென்ற இந்துசாதன வெளியீட்டில் எழுதிய கடிதத்தைக் கண்டேன்.

நான் அறிகிற அளவில் அக் கூற்று உண்மை யல்லவென்று உரைக்கக்கூடியதாயிருக்கின்றது.

சித. மு. ப சிதம்பரநாதச் செட்டியார்
புண்ணியகச்சி
தரும பரிபாலனசபை
உதவிக் காரியதரிசி,
வண்ணார்பண்ணை
11—11—52.

### மிக்க மதி எது?

உலகப் பெரியீர்! ஜாதன்மூகி வருஷம் (1956) கார்த்திகைமீ 3-ந் தேதி பூரணை நாடி 16—55க்கு மேல் கிருஷ்ணபக்ஷப் பிரதமை எனவும், இம் மாதம் 23-ம் தேதி மார்கசீர்ஷ சுக்கில ஷஷ்டி நாடி 43—58 வரை எனவும், அதனையடுத்த மார்கழிமீ 4-ந் தேதி மார்கசீர்ஷப்பகுளப் பிரதமை நாடி 42—16 வரை எனவும்; இம்மாதம் 21-ந் தேதி புஷ்ய சுக்கில ஷஷ்டி நாடி 31—24 வரை எனவும் வரப்போகின்றன. இதனுள் ஸ்ரீவிநாயகப் பெருமான் ஷஷ்டி விரதாரம்பமும், ஷஷ்டி விரத பூர்த்தியும் கொள்ளவேண்டிய மிக்க மதி எது? கந்த புராணம் அனந்தன் சாபநீங்கு படலத்தில் "விண்ணுமம் புகல்கின்றதிங்கடன்னின் மிக்கமதி தனிலாறும் பக்கமாகும்" எனக் காணப்பெறுகின்றது. திருமயிலை உயர் திரு சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள் தொகுத்து வெளியிட்ட விநாயக மஞ்சரியில "கார்த்திகை மாதத்துக் கிருஷ்ண பக்ஷ பிரதமை முதல் மார்கழி மாதத்துச் சுக்கில பக்ஷ சட்டியீறாகிய இருபத்தொரு நாள்" எனக் காணப் பெறுகின்றது. மேலும் உள்ள ஆதாரங்களோடு ஒப்பு நோக்கி அதற்கு உகந்த மிக்க மதி எது? என்பதை விளக்க வேண்டுகின்றேன்.

சிவசூரியநாராயணன்
பஞ்சாங்க கணிதர்
[illegible]
4—11—52
இட்டமொழி.

## தாய்மொழியிற் கல்வி அளித்தல் சாலப் பொருந்தும்!

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு 'சர்வகலாசாலைக் கல்லூரி'யில் கற்ற ஒருவர் தமக்கு ஆங்கில மொழியானது தமிழறியாதவர்களிலுள்ள தபால் நிலையங்களில் முத்திரை வாங்க மாத்திரமே உபயோகப்படுகிறது என்கிறார். குறிக்கோளுடன் வாழ்பவர் கதை அது.

"நாம் விறகு வெட்டுபவர்களாகவும் தண்ணீர் இறைப்போராகவும் இராது எம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, உலகின் நகரிக நாடுகளுடன் சமமாக இருக்க வேண்டுமாயின் நமக்குத் தொழில் நுட்பக் கல்வியும் விஞ்ஞானக் கல்வியும் வேண்டும். நாம் வேண்டுவோர், மருத்துநூல், பொறிநூல், வேதிநூல், தாவரநூல், கிலநூல் விற்பன்னர்களும் கமத்தொழில் வல்லுனருமே. ஆங்கிலத்தை உபயோகிக்காது எப்படி நாம் இவர்களைப் பெறுவோம்!"

### உலகாயுதம் ஊன்றிவிட்டது!

லௌகிகம் மனிதரை எவ்வளவு பற்றிப் பிடித்துளது! நாட்டில் 75 வீத மக்கள் கமக்காரராக வாழ வேண்டியவர்கள். ஆங்கிலக்கல்வி இன்றேல் அவரனைவரும் திறமையுடையோரல்லர் என்பது பட்டினவாசிகளின் அபிப்பிராயமாகும்.

கிராம மாணவர்கள் ஆங்கிலக் கல்லூரிகளில் கற்பதால் அவர்கள் மண்ணிலிருந்து பெயர்க்கப்பட்ட மரங்களாகின்றனர் என்பதற்குக் கிராமவாசஞ் செய்யும கல்லூரி ஆசிரியர் அனைவரும் பெற்றோருஞ் சான்று பகர்வர். இதையறியப் பெரும் மதிநுட்பம் வேண்டியதில்லை. மறை விஞ்ஞானசாத்திர அறிஞரைச் சிருட்டிக்கவென்று கல்வித்திட்டம வகுத்து, அதன் மூலம் புக்காற்பங்கு வருங்காலக் குடிகளை 'உதவாக்கரை'களாக்குவது அறிவுடைமையாமோ? படித்தோரின வேலையில்லாத் திண்டாட்டத்தைத்தான் பெருக்கும அத்திட்டம.

### சோம்பல் மனப்பான்மை!

நாட்டுமொழியில் விஞ்ஞானமும், கணிதங்களும், கற்பிக்க ஆசிரியரோ பாட புத்தகங்களோ இல்லை எனபது இன்னொரு குற்றச்சாட்டு. தேவை தோன்றுமிடத்து அதைப் பூர்த்தி செய்யும் சாதனங்களும பிறக்கும. இந்தியாவில சிரேட்ட பாடசாலை விடுகை வகுப்புவரை தாய்மொழிமூலம் கல்வி புகட்டப்படுகின்றதே! சர்வகலாசாலை முதனிலை வகுப்புக்கே விஞ்ஞான நூல்கள் எழுதப்பட்டுள்ளனவே (அண்ணாமலைச் சர்வகலாசாலைத்தமிழ் வெளியீடுகளைக் காண்க.) காசி சர்வகலாசாலையில் இவ்வகுப்பு விஞ்ஞான பாடங்களைக்கூட ஹிந்தியில் படிக்கலாம் (விரும்பினால் மட்டும் ஆங்கிலத்தில்) என்ற நட்டம் நிறைவேற்றப்படுகிறது. (சிங்களத்திலும புதிய நூல்கள் வெளிவருகின்றன என விளம்பரவாயிலாக அறிகிறோம.) ஆகவே எம் நாட்டில் இது சாத்தியமாகாது எனல் எம் சோம்பலையேகுறிக்கும; இளம மொழியான ஹிந்தியின் வளர்ச்சி முதுமொழியாளராய சிங்களரையும் தமிழரையும் நாணித் தலைகுனியச் செய்கின்றது.

சிரேஷ்ட பாடசாலை ஆரம்ப வகுப்புகளில் கேத்திரகணிதம், விஞ்ஞானம், படிப்பிக்கும் ஆசிரியர், மாணவர்படும் திண்டாட்டத்தை உணருகிறார்கள். கேத்திரகணித விதிகள், தாட்டாந்தங்களெல்லாம் குருட்டுப் பாடமாக ஒப்புவிக்கப்படுகின்றன. இதனால் கணிதக் கல்வியின் ஒரு முக்கிய நோக்கமாகிய பகுத்தறிவு விருத்திதடைப்படுகிறது. சிரேஷ்ட வகுப்பு ஆசிரியர் ஒருவர் "எனது கணிதவகுப்பு மாணவர்களெல்லாரையும் பரீட்சைக்கு அனுப்பலாம்; தடையின்றி அவர்கள் சித்தி எய்துவர் — பாடமாக்குதல் மூலம்" என்றார். விஞ்ஞானத்தின் கதையும் பெரும்பாலும் இது போன்றதே. மாணவர் விளங்கும் தாய்மொழிமூலம் கற்பித்தால் இந்தக் கதி ஏற்படுமா?

### கலாசாரம் என்றால் என்ன?

எம்மீது மேனாட்டின் கலாசாரத்துவர்கள் சொரியும் புகழ்மாலைகளைக் காண்மின! கலாசாரவனந்தரமாகக் கருதப்படுகிறது இலங்கை. பழமையில் மூழ்க்கி கிடக்கும் நாட்டுப்புற மக்களிடையே, பழகியவர்கள் மக்கட் பண்பு இங்கு உளதோ இலதோ என்பதறகுச் சான்று பகர்வர்! ஆங்கிலக் கல்வி கற்றுத் தம சூழலில் இருந்து பெயர்க்கப்பட்ட 'முன்னேற்ற மடைந்தோரே' இன்று சுயநலம், இலஞ்சம்அறபத்தனம்முதலிய தீமைகளுக்கு இருப்பிடமாயுள்ளனர். உயர்ந்த சிந்தனைக்கும் அவர்க்கும் இடைத்தூரம மிகப் பெரியது.

முக்கியமாகச் சர்வகலாசாலைக் கல்வி எத்தனை பேரிடத்து மனிதப் பண்பாடுகளை வளர்த்திருக்கிறது? சித்திரம், சிற்பம, சங்கீதம், ஆடையணிகள் ஆகியவற்றிலிருக்கும் அழகைச் சுவைப்பதுதான கலாசார்முடைமைக்கு அத்தாட்சியா? 'கலாசாரம்' என்பது இன்று மனிதனுள் குடிகொண்டுள்ள இயல்பு, வழக்கங்களை மூடி மறைக்கும் போர்வைக்குச் சூட்டப்பட்ட நாமமாகும். பண்படுத்தப்படாத நிலத்தின் மேடு பள்ளம், கல முள், புதர் பற்றைகளை மறைத்து வைக்க, விரித்த கம்பளமே ஐரோப்பிய கலாசாரம் என இங்கு பேசப்பட்டுவரும்பண்டம. இருந்து சிந்திப்போர் தமமனச்சாட்சியைக் கேட்டுப் பார்ப்பார்களாக.

நாம் கூறுவது மனிதனைப் 'பொருளாதார மிருக'மாகக் கருதி ஆங்கிலமே அவன்உய்ய வழியென்றும் மேனாட்டுக்கலாசாரம் எம் சிறாருக்கு அளிக்கப்படாவிடின நாம பெரும் துரோகிகளாவோம் என்றும் பொய்க் கருத்துக்களைப் பரப்பாமல், இலங்கை மக்கள இலங்கையராக — இல்லை,.... ஆறறிவு படைத்த மனிதராக— வாழச் செய்யும் கல்வியை மிக இலகுவான வழியிலே— தாய் மொழியிலே — அளிக்க வேண்டும்; இரண்டு வீத மக்களுக்காக மிகுதி 98 வீதம் மக்களைத் தண்டனைக்குள்ளாக்கவேண்டாம்! விரும்பியோர் விரும்பியவாறு ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளலாம் எனபதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டத்தரிப்புக் கிராமச சங்கம்

### கிராம வேலை விளம்பரம்

### பண்டத்தரிப்புச் சந்தைக்குள் கட்டிடம் கட்ட

மேற்படி வேலையைக் குத்தகையாக எடுத்துச் செய்ய விரும்புவோர் 1952 - ம் ஆ கார்த்திகை மாசம்20 ம் திகதி பகல் 12மணிக்கு முன் கிராமச்சங்கத் தலைவருக்கு மனுப்பண்ணல் வேண்டும்.

மனுப்பண்ண விரும்புவோர் 1952 - ம் ஆ கார்த்திகை மாசம் 20.ம் திகதிக்கு முன் மேற்படி சங்கக் கந்தோரில் ஒவ்வொரு விகிதடாப்புப் பத்திரத்திற்கும் ரூபாய் ஐம்பது கட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்படி வேலையைப்பற்றிய விபரங்களைக் கிராமச்சங்கக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

சு நாகமுத்து
கிராமச்சங்கத் தலைவர்
6—11—52.

M. 165 10—11—52.

## குத்தகைக்கு நிலம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குச் சொந்தமானதும் நாயன்மார் கட்டு ஆசுபத்திரிக்கு அணித்தாயுள்ளதுமாகிய 22 பரப்புக்கொண்ட "வீரன்புலம்" என்னுங் காணியை 1952 ம் ஆண்டு அக்டோபர் மாசம் முதலாந் தேதி தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுக்க மனுப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

ஆதனத்தைக் குத்தகைக்கு ஏற்பவர் ஒருவருடக் குத்தகைப் பணத்தை உடனே கட்டவேண்டும்.

இந்துக்கல்லூரி அதிகாரசபைக்கு ஷை குத்தகையை அங்கீகரிக்கும் அல்லது புறக்கணிக்கும் உரித்து உண்டு. குத்தகையை அதிகார சபை அங்கீகரித்தால் ஏற்பவர் தனது செலவில் நொத்தாரிசு மூலம் குத்தகை உறுதி முடிப்பிக்க வேண்டும்.

நவம்பர் மாசம் 17 ந் திகதிக்கு முன் மனுப்பத்திரங்கள் அனுப்ப வேண்டும்,

அ அருளர்பலம்
கௌரவ காரியதரிசி
யா. இ. க. அ. சபை
யாழ்ப்பாணம்,
4—11—52.

M 156 4, 7. 11-11-52

## சைவப் பிரசங்கம்

காரைநகர் கருங்காலி ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் சைவ மகா சபைக் காரியதரிசி ஸ்ரீமான் M. A. கந்தையா அவர்கள் "சமயப்பண்பு" என்னும் விடயத்தைப் பீடிகையாகக் கொண்டு பேசும்போது மனிதப்பிறவி எடுத்தவர்கள் கடவுளின் திருவருளைப் பெறுதல் அவசிய மென்றும், அதன் பொருட்டு ஆலய வழிபாடு செய்தலும் சமய நெறி நின்று தேவார திருவாசகங்களை ஓதிக் கடவுளைத் தினமும் தியானிக்க வேண்டுமென்றும் புத்திமதி புகட்டினார். அதன் பின் ஷை ஆலய தர்மகர்த்தா பேசுகையில் பண்டைக் காலத்தில் சைவ பரிபாலனத்தின் பொருட்டு ஆலயங்கள், மடாலயங்கள் வித்தியாசாலைகள் என்பன தாபித்துப் பெரும் தொண்டு புரிந்தார்களென்றும் தற்காலத்தில் ஷை தாபனங்களிற் பல, நாடகமாத்திரமாய்ச் பரிபாலிக்கப்பெற்று வருவதினால் சமயசுபிட்சமை அற்றவர்களாகி விடுகின்றார்களென்றும், சமயப் பண்பை வளரச் செய்வதற்கு மேற்படி தாபனங்கள் மீண்டும் தொண்டாற்ற ஆரம்பிக்க வேண்டுமென்றும் கூறியபின் சபை இரவு 10மணியளவில் நிறைவெய்தியது.

# அடைவு நகை விற்பனவு

### விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு குமாரவேலு செல்லையா கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் கீழ்விபரிக்கப்படும் நகைகள் 29-11-52 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

| | | | |
|---|---|---|---|
| 2712 | 22-3-50 | 8.00 | ராப்ஸ்ரோட் மு. முகமது அப்துல்காதர் கல் மோதிரம் 1 |
| 3379 | 15-6-50 | 10 | நாவந்துறை கு. குருசுமுத்து சாதா. மோதிரம் ஒன்று. |
| 4258 | 25.9-50 | 20 | ஐதுரூஸ் மொகாம் லேன் மு. அப்துல் றசீத வெ. கல், தூக்கம் சோடி 1. |
| 4591 | 2-11-50 | 12 | ராப்ஸ்ரோட் மு. மீராமுகிதீன கால் காப்பு 4. |
| 5219 | 8 1-51 | 70 | மானிப்பாய் ரோட் S. முகமது சுலதான கைச் சங்கிலி சோடி 1 சுரை இல்லை. |
| 5349 | 22-1 51 | 17 | நாவாந்துறை ரோட் S. M சுல்தான் பழுது கைச சங்கிலி |
| 73 | 31-3-51 | 100 | நாவாந்துறை பொ. ஆசுபதி வளைசில் காப்பு சோடி 1 |
| 278 | 26-4-51 | 12 | முகிதீன்பள்ளி ரோட் S. M. முகம்மது சுலதான் அலுகுத்து 1. குச்சி 1. |
| 321 | 30 4-51 | 10 | கொல் ஒழுங்கை மு. அப்துல் அசீஸ (வெ. கல் தூக்கம் சோடி 1) |
| 618 | 6-6 51 | 50 | ஐந்தசந்தி மீ. அப்துல் றகீம் பூட்டுக் காப்பு 1. |
| 758 | 27-6-51 | 20 | ஐதுரூஸ் மொகாம் லேன் மீ. வதூர் பெட்டி மோதிரம் 1 |
| 866 | 17-7-51 | 6—00 | பிரப்பங்குளம்ரோட் M. A கறீம் வெ. கல் குச்சி சோடி 1, |
| 1086 | 15-8 51 | 42 | நாவாந்துறை சி. விஸ்னு திருகாணி இலலாத பழுது கை சங்கிலி 1. |
| 1238 | 4-9-51 | 30 | பிரப்பங்குளம ரோட் அ. மீரா நாச்சியா வெ. கல. பெண்டன் 1 |
| 1231 | 4-9-51 | 10 | நாவாந்துறை த. செல்லம்மா நாட்டுக் கடுக்கன் சோடி 1. |
| 1249 | 5-9-51 | 10 | வில்லூண்டிரோட் அ. இபுறாகிம் பூசாந்திரம 1. |
| 1265 | 8-9-51 | 10 | நாவாந்துறை நா. செல்லையா தூக்கம் குச்சி சோடி 1. |
| 1346 | 18 9.51 | 15 | பிரப்பங்குளம் ரோட் அ. மீரா நாச்சியா வெ. கல. பினாக் 1. குச்சி 1. சுரை இல்லை |
| 1374 | 18-9 51 | 50 | முகிதீன் பள்ளிரோட் K. M. அபுபக்கர் ப. கல். மோதிரம் 1. |

**29-11-52 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கமாக பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.**

வண்ணார்பண்ணை, S. PasupathyChettiar,
5—11—52. வெந்திஸமேஸ்தர்.

M. 163 7, 11—11—52.

நீங்கள் இளமைப் பருவத்தையடைய

சி. எம். சாமி




உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகராவமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,

**24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0**

## சூரு பஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

**24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20**

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)

M. 16. 25-4-52—25-10-52.

சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்

# சுசீலாவின் காதல்

## யாழ். நகர மண்டபத்தில்

ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்

1952 -ம் ஆ
மார்கழி மீ 6 - உ சனிக்கிழமை

சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக

மிக விமரிசையாக நடத்தப்படும்

| திறமான | திறமான |
|---|---|
| **தேக்க மரங்கள்** | **ருணி மார்க் ஓடுகள்** |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

### பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

### தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

### தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

### உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

### கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE



நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
**நகை**
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

விலாசம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்,

Printed and Published by S. P. Kandiah... residing at 245; Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press. Vannarponna, Jaffna on Tuesday November 11 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org